Ti Ta
Nb Zr Ss
Ni Pt

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2015 Company

Tiaano since '92
Innovation In Inert Metals

#48, Noothanchary, Madambakkam, Chennai - 126. Ph.: +91 44 2278 1148, +91 94445 69900 Fax: 2278 1362 Email: marketing@tiaano.com Web: www.tianode.com

# "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2016-2017

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 120% ↑
- **Products for ...**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  - Up to Aug. 16 : 979 Nos.
  - Up to Jul. 16 : 969 Nos.
- **Performance Aug. 16 ...**
  - Turnover growth : 2.74%
  - Employment growth : 1.63%
  - 100% Attendance : 8.64 %

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

- Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil – Water Treatment Equipments.
- Fib Tec Composite – FRP/ GRP Equipments.
- HydroGen – HHO Generators
- Titanictrade – Portal for Exotic Metals
- Tiaano Vidyashrm (CBSE Curriculum)




## விட்டு கொடுக்கும் மனப்பான்மை!

சின்ன, சின்ன நிகழ்ச்சிகள் தான் 'ஈகோ' என்று சொல்லப்படும் ஆணவம். குடும்பத்தில், அலுவலகத்தில் இந்த ஆணவம் வந்துவிட்டால் எத்தனைக் குழப்பங்களைச் சந்திக்கிறோம்.

இதை எண்ணும் பொழுது, மா தத்துவ தவமுனிவரின் வார்த்தைகள் என் மனதுக்குள் நிழலாடின. அவர் சொன்னார், "சந்தித்தவர்க்கு வணக்கம் சொல்லுங்கள்". முதல் வணக்கம் அவர் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்காமல் வணக்கம் சொல்லுங்கள். வணக்கம் சொல்லுவது ஒரு பெரிய கலை. சிறியவரோ, பெரியவரோ, நட்போ, பகையோ, எதிரியோ சந்தித்தவர்க்கு வணக்கம் சொல்லுங்கள். பதில் வணக்கம் சொல்லும் பொழுது பாசம் வளர்கிறது. அன்பு அங்கு ஜீவிதம் அடைகிறது. அதன் பலன் மனித நேயம் மலர்கிறது. பகை மறைகிறது. சிறியவரோ, பெரியவரோ, நட்பு வட்டம் விரிகிறது. எளிய கருத்து, தத்துவமான உண்மை! குடும்பத்தில், சமூகத்தில், நட்பு மற்றும் உறவு வட்டத்தில், ஏன் வியாபாரத்தில், அரசியலில் இந்த விட்டு கொடுக்கும் மனப்பான்மை வந்துவிட்டால், நல்லனவற்றின் விளைச்சல் நாலு போகம் ஆகாதா? ஆகும்.

*Compiled By : Ms. P. E. Nancy*
Director - Admin

## விரல் நுனியைப் பற்றி இதெல்லாம் தெரியுமா?...

மனிதனுக்கு விரல் நுனியின் மகத்துவம் தெரிவதில்லை. விரல் நுனியை மிக சாதாரணமாக நினைக்கிறார்கள். ஆனால், அந்த விரல் நுனியை மட்டுமே நம்பி தினமும் பல காரியங்களை நாம் செய்து வருகிறோம். விரல் முனை எலும்பு நகத்தின் நுனி வரை நீளுவதில்லை. கிட்டத்தட்ட நகத்தின் பாதி பகுதியில் அது நின்று விடுகிறது. அந்த எலும்புக்கு மேல் பகுதியில் தான் குஷன் போன்ற திசுக்கள் உள்ளன. நாம் வளர, வளர, நம் விரல் நுனியின் செயல் திறனும் வளர்ந்து கொண்டே இருக்கும். சிறுவயதில் சாக்பீஸ் கொண்டு எழுதும் போது, எவ்வளவு முறை சாக்பீஸை உடைத்திருப்போம். ஆனால், பெரியவர்களாக ஆன பிறகு சாக்பீசால் சரளமாக தொடர்ந்து எழுத முடிகிறதே..! விரல் நுனியின் செயல் திறன் வளர்ச்சியால், திறமை வளர்ந்தாலும் விரல் நுனியின் உருவம் பெரிதாவதில்லை.

அதிகம் புகைப்பவர்கள், மது அருந்துபவர்களின் விரல் நுனிகள் திடீரென்று பெரிதாவது இயல்பு. ஒவ்வொரு விரல் நுனியும் உணர்ச்சி மிகுந்தவைதான். இவற்றில் மிக அதிகமான ரத்த ஓட்டம் உண்டு. அதனால்தான் ரத்த பரிசோதனைக்கு பல நேரங்களில் விரல் நுனியில் இருந்தே ரத்தம் எடுக்கிறார்கள். விரல் நுனியில் துருப் பிடித்த ஊசியோ, முள்ளோ குத்தி "செப்டிக்" ஆகி ஒரு பழுத்த இலந்தம் பழம் போல் ஆகிவிடுகிறது. இதை அகற்ற உடனடியாக ஆன்டிசெப்டிக் மருந்துகளை அளித்து, பிறகு சிறிய அறுவைசிகிச்சை மூலம் அங்குள்ள சீலை வெளியேற்றி விட வேண்டும். இல்லாவிட்டால் விரல் நுனி தனது உருவத்தையும், மெத்தென்ற தன்மையையும் இழக்க நேரிடும். எனவே விரல் நுனி இன்றியமையாதது என்பது புரிகிறதல்லவா!

*Compiled By : Mr. K. Manivannan*
Marketing

## FUNCTIONAL WISHES



Gandhi Jayanthi
2nd October



Ayudha Pooja
10th October



Muharram
12th October



Happy Diwali
29th October

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant: | Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel: 22294565 |
| ESI Corporation | : Tambaram Dispensary |
| | Tel: 044 2226 0194 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



**Mrs. R. Jayanthi** **10th Oct.**
Design

**Mr. K. Venkatesan** **11th Oct.**
Production

**Mrs. K. Easwari** **21st Oct.**
Coating

**Best Wishes from Tiaano Employees**

Some people come in your life as blessings.
Some come in your life as lessons.

- Mother Teresa

### கான்:ஃபிடன்ஸ் கார்னர்

அந்தத் தெருவில் இரண்டு குதிரைகள் இணைந்தே திரியும். பார்ப்பதற்கு இரண்டும் ஒன்று போல் தெரியும். நெருங்கிப் பார்த்தால் ஓர் உண்மை புரியும். இரண்டு குதிரைகளில் ஒன்றுக்குக் கண் தெரியாது. கண் தெரியாத குதிரையை அதன் உரிமையாளர் கட்டிப்போடவில்லை. இன்னொரு குதிரையுடன் மேயவிட்டார்.

ஆனால் மிக வித்தியாசமாக ஒன்றைச் செய்தார். கண் தெரிகிற குதிரையின் கழுத்தில் சிறிய மணி ஒன்றைக் கட்டியிருந்தார். மணிச்சத்தமும் கேட்டு ஊனமுற்ற குதிரை, அடுத்ததைத் தொடரும்.

அந்த உரிமையாளர் செய்ததைத்தான் கடவுளும் செய்கிறார். ஒவ்வொரு குறைபாட்டுக்கும் மாற்று ஏற்பாட்டை மறக்காமல் செய்துள்ளார்.

– கான்:ஃபிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

### மன தைரியம்

ஒரு பாம்பு வளைந்து நெளிந்து தரையில் ஊர்ந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்த ஒரு குட்டிக் குரங்குக்கு வேடிக்கையாக இருந்தது. மெதுவாகப் போய் அந்தப் பாம்பைக் கையில் பிடித்து விட்டது. பாம்பு குரங்கின் கையை இறுக்கமாகச் சுற்றிக் கொண்டது. விஷப் பல்லைக் காட்டி சீறியது. குரங்குக்குக் கொஞ்சம் பயம் வந்து விட்டது. கொஞ்ச நேரத்திலேயே அதன் கூட்டமெல்லாம் கூடி வந்து விட்டன. ஆனாலும் யாருமே குட்டிக் குரங்குக்கு உதவ முன்வரவில்லை.

"ஐயய்யோ, இது பயங்கரமான விஷமுள்ள பாம்பு. இது கொத்துனா உடனே மரணந்தான். இவன் பிடியை விட்டதுமே பாம்பு இவனப் போட்டுடும். இவன் தப்பிக்கவே முடியாது" என்று குட்டிக் குரங்கின் காதுபடவே பேசிவிட்டு ஒவ்வொன்றாகக் கலைந்து சென்று விட்டன.

தன்னுடைய கூட்டமே தன்னைக் கைவிட்டு விட்ட சூழ்நிலையின் வேதனை, எந்த நேரமும் கொத்திக் குதறத் தயாராக இருக்கும் நச்சுப் பாம்பு, மரண பயம் எல்லாம் சேர்ந்து குரங்கை வாட்டி வதைத்தன. "ஐயோ, புத்தி கெட்டுப் போய் நானே வலிய வந்து இந்த மரண வலைக்குள் மாட்டிக் கிட்டேனே". குரங்கு பெரிதாய்க் குரலெழுப்பி ஓலமிட்டது. நேரம் ஓடிக் கொண்டே இருந்தது. உணவும், நீரும் இல்லாமல் உடல் சோர்ந்து போய்விட்டது. கிட்டத்தட்ட மயங்கி சரியும் நிலைக்கு வந்து விட்டது. கண் இருளத் தொடங்கியது.

அந்த நேரத்தில் ஞானி ஒருவர் அந்த வழியே வந்தார். குரங்கு இருந்த நிலைமையைப் பார்த்ததும் நடந்ததை உணர்ந்து கொண்டார். குரங்கை நெருங்கி வந்தார். சொந்தங்களெல்லாம் கைவிட்டுவிட்ட நிலையில், தன்னை நோக்கி மனிதர் ஒருவர் வருவதைக் கண்ட குட்டிக் குரங்கிற்கு கொஞ்சம் நம்பிக்கை வந்தது. அவர் நெருங்கி வந்து சொன்னார். "எவ்வளவு நேரந்தான் பாம்பைக் கையிலேயே பிடிச்சிக்கிட்டு கஷ்டப்படப் போற? அதைக் கீழே போடு" என்றார். குரங்கோ, "ஐயய்யோ, பாம்பை நான் விட்டுட்டா அது என்னைக் கொன்னுடும்" என்றது. அவர் மீண்டும் சொன்னார், பாம்பு செத்து ரொம்ப நேரமாச்சு. அதைக் கீழே வீசு. அவர் வார்த்தையைக் கேட்ட குரங்கு பயத்துடனே பிடியைத் தளர்த்திப் பாம்பைக் கீழே போட்டது. நிஜமாகவே பாம்பு ஏற்கனவே குரங்குப் பிடியில் செத்துதான் போயிருந்தது.

குரங்குக்கு உயிர் வந்தது. அவரை நன்றியுடன் பார்த்தது. இனிமே இந்த முட்டாள் தனம் பண்ணாதே என்றபடி ஞானி கடந்து போனார்.

## தெரிந்து கொள்வோம்

### Have a glass of water Before Tea or Coffee

Tea is pH value 6, Coffee is pH value 5. It increases Acidity in the body. Acidity causes lot of major diseases like Cancer, Ulcers etc. Drinking glass of water before Tea and Coffee will minimize the damage.

### அதிகாலை எழுவதால் பயன்கள்

* மூளை நரம்பு இயக்கங்கள் சீராகச் செயல்படும். மூளை சுறுசுறுப்பாக இயங்கும். இதனால், தன்னம்பிக்கையும் உற்சாகமும் அதிகரிக்கும்.
* காலையில் மாசற்ற தூய்மையான ஆக்சிஜனைச் சுவாசித்தால், நுரையீரல் வலுவடையும்.
* ஆஸ்துமா, சைனஸ் போன்ற பிரச்னைகள் வராது.
* அதிகாலை 4.30 - 5.30 மணிக்குள் மூச்சுப் பயிற்சி, யோகா செய்வது, உடலில் உள்ள அனைத்து உறுப்புகளுக்கும் நலம் பயக்கும்.
* நச்சுக்கள் சீராக வெளியேறுவதால் சிறுநீர், கல்லீரல், பெருங்குடல் போன்ற உறுப்புகள் சீராக இயங்கும்.
* உடல் நலனுக்கு மட்டுமல்ல. மன நலனுக்கும் அதிகாலையில் எழுவது சிறந்தது.

*Compiled By : Mrs. P. Seevajothi*
*Design*

### Health Benefits of Aloe Vera

In ancient times, aloe vera and its extracts were used for medicinal purposes. Today, researchers are discovering more advantages of this versatile plant.

- Rich in Vitamins & Minerals.
- Lowers high cholesterol.
- Stabilizes blood sugar.
- Protects the body from stress.
- Prevents kidney stones.
- Reduces high blood pressure.
- Strengthens gums and promotes strong and healthy teeth.
- Fights bacterial, viral & fungal infections.

*Collected from Internet*

நம்மில் எத்தனையோ பேர் மனக்கவலை என்ற செத்த பாம்பைக் கையில் பிடித்துக் கொண்டு விட முடியாமல் கதறிக் கொண்டிருக்கிறோம்.

- கவலைகளை விட்டொழியுங்கள்.
- மகிழ்ச்சியாய் இருங்கள்.
- ஒவ்வொரு கெட்ட குணங்களும் ஒவ்வொரு நோயை உருவாக்கும்.
- பெருமையும் கர்வமும் இதய நோய்களை உருவாக்கும்.
- கவலையும் துயரமும் வயிற்று நோய்களை உருவாக்கும்.
- துக்கமும் அழுகையும் சுவாச நோய்களை உருவாக்கும்.
- பயமும் சந்தேகமும் சிறுநீரக நோய்களை உருவாக்கும்.
- எரிச்சலும் கோபமும் கல்லீரல் நோய்களை உருவாக்கும்.
- அமைதியை விரும்புவதே அனைத்தையும் குணமாக்கும்.
- ஆரோக்கியமான உடலிலிருந்தே ஆரோக்கியமான சிந்தனைகள் பிறக்கும்.
- உடலின், மனதின் தேவைகளுக்கு மதிப்பளியுங்கள்.
- பசிக்கும் போது உணவருந்துங்கள்.
- பசியை நீங்கள் புறக்கணித்தால் பசி உங்களைப் புறக்கணிக்கும்.
- எப்போதும் உடலின் அழைப்பை புறக்கணிக்காதீர்கள்.

*Compiled By : Mr. C. Abilash*
*Marketing*

### Great Attitude

Once a bird asked a bee, after a continuous hard-work, you prepare the honey. But a man steals the honey. Do you not feel sad? Then the bee replied: Never... because a man can only steal my honey not the art of making honey..!!

*Compiled By : Ms. P. Nirmala Devi*
*Finance*

### மூச்சில் இருக்கிறது சூட்சுமம்

உணவு, நீர், காற்று... இந்த மூன்றில் இருந்துதான் நம் உடலுக்குச் சக்தி கிடைக்கிறது. இந்த மூன்றில் இருந்து தவறான விஷயங்கள் ஏதேனும் உடலுக்குள் சென்றுவிட்டால்தான் நோய் வருகிறது.

நம்மை ஆரோக்கியமாக வைத்திருக்கும் நாளமில்லாச் சுரப்பிகளை தியானம், யோகாசனம் போன்றவைதான் ஊக்குவிக்கின்றன. அதனால், ஒவ்வொருவரும் தங்கள் உடலைப் பராமரிப்பதற்காக ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்க வேண்டும். உடலுக்குள் தேங்கிவிடும் கழிவுகளை வெளியேற்றுவதற்கும், உணவின் கலோரிகள் எரிக்கப்படுவதற்கும் காரணம் இந்த மூச்சுக்காற்றுதான்.

நாம் சுவாசிக்கும் இந்த பிராண வாயுதான் ரத்தத்தை சுத்தப்படுத்துகிறது. மூச்சை இழுக்கும்போது, காற்று நுரையீரலுக்குள் முழுமையாகச் சென்று சேர வேண்டும். ஆனால், நாம் பெரும்பாலும் மேலோட்டமாகவே சுவாசிக்கிறோம்.

இதனால், நுரையீரல் முழுமையாகச் சுருங்கி விரிவது இல்லை. நுரையீரல் நன்றாக சுருங்கி விரிய மூச்சுப் பயிற்சி அவசியம். “எந்த ஒரு வலியும் இல்லாமல் நம்மைக் குணப்படுத்தும் வல்லமை மூச்சுப் பயிற்சி மற்றும் யோகாசனங்களுக்கு உண்டு”.

*Compiled By : Mr. V. Azhakesan*
*Marketing*

## கவிதைகள்

### கண்ணீர்!

சில நேரங்களில்
வார்த்தைகளில் மொழிபெயர்க்க இயலாத
வேதனைகள் கண்ணீரில்
கரைந்து போகிறது.
காலமும், கண்ணீரும்
இல்லாமல் இருந்திருந்தால்
காயங்கள் எதுவுமின்றியே
அழிந்துபோயிருக்கும் இந்த மனித இனம்!

*Compiled By : Mrs. C. Bavani*
*Administration*

### நட்பு

நட்பு என்பது சூரியன் போல்
எல்லா நாளும் பூரணமாய் இருக்கும்

நட்பு என்பது கடல் அலை போல்
என்றும் ஓயாமல் அலைந்து வரும்

நட்பு என்பது அக்னி போல்
எல்லா மாசுகளையும் அழித்து விடும்

நட்பு என்பது தண்ணீர் போல்
எதில் ஊற்றினாலும் ஒரே மட்டமாய்
இருக்கும்

நட்பு என்பது நிலம் போல்
எல்லாவற்றையும் பொறுமையாய் தாங்கிக்
கொள்ளும்

நட்பு என்பது காற்றைப் போல்
எல்லா இடத்திலும் நிறைந்து இருக்கும்

*Compiled By : Ms. P. Rajeswari*
*Finance*

## ஹைக்கூ

கண் சிறகில் உன் முயற்சியை வை
கருவிழியும் பார்க்கும் பாதையை அல்ல
உன் இதயத்தின் துணிவை

## சிந்தனைக்கு

சந்தோஷம் இருக்கும் இடத்தில்
வாழ நினைப்பதை விட
நீ இருக்கும் இடத்தில்
சந்தோஷத்தை உண்டாக்கு
உன் வாழ்க்கையில்
நிறைவு இருக்கும்...

*Compiled By : Mrs. M. Sudha*
*Marketing*

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

## நம்பித்தான் ஆகவேண்டும்

### 5S (தொடர்ச்சி LVII)

**மின்னும் சுத்தம்**

இந்தத் தயக்கம் அல்லது கூச்சம் அல்லது அருவை - இப்படி அதற்கு நாம் என்ன பெயர் சூட்டினாலும் சரி. அந்தச் சூழலில் வேலை செய்கிறவர்களுடைய செயல்திறனை அது நேரடியாகப் பாதிக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை.

சுத்தமில்லாத பணிச் சூழலின் இன்னொரு எதிர்மறை விளைவு, இயந்திரங்கள் அல்லது அவற்றின் பாகங்கள் வீணாவது.

இயந்திரங்கள் அடிக்கடி சுத்தம் செய்யப்பட்டால், அவற்றில் ஏற்படும் சின்னச் சின்ன கீறல்கள், தேய்வுகள், பிரச்சனைகளை எல்லாம் ஆரம்பத்திலேயே கவனித்துச் சரி செய்வது சாத்தியம். அப்படியில்லாமல், அந்த இயந்திரத்தின்மீதே குப்பைகளைக் கொட்டி நிரப்பினால், என்றைக்காவது அது மொத்தமாகப் படுத்துவிடும் போதுதான் நமக்குத் தெரியவரும்.

சில சமயங்களில், குப்பைகளே பல அபாயங்களை மறைத்து விடக்கூடும். உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட இயந்திரத்தில் ஏதோ கசிவு ஏற்படுகிறது என்றால், அதைச் சுற்றிலும் குப்பைகள் நிரம்பிக் கிடக்கிறபோது, நம்மால் அதைச் சீக்கிரத்தில் கவனிக்க முடிவதில்லை.

இப்படிக் குவிந்துகிடக்கும் உலோகக் குப்பைகள் தொழிலாளர்களின் கண்களில் தவறி விழுவது அல்லது கசிந்த எண்ணெயில் சிலர் வழுக்கி விழுவது போன்ற விபத்துகளும், சுத்தமில்லாத பணியிடத்தின் விளைவுகள்தான்.

இப்படி சுத்தத்தின் அவசியத்தை வலியுறுத்த, ஏராளமான எதிர்மறை உதாரணங்களைச் சொல்லிமுடியும். இவற்றின் நோக்கம், நம்மை பயமுறுத்துவது அல்ல.

தொடரும்...

### 20 Hours Batch Type ECP

Disinfection Capacity min. 75 lacs Litre per Day(7.5 MLD) by 2ppm $Cl_2$

